# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2023 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க,* ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2023*, ஓகத்து மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க,**
**ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்**

[*2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச. வ.- ஓ. 41/2023*

**2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "நாலாயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பது பில்லியன் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதின்மூவாயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பது பில்லியன் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "நாலாயிரத்து இரு நூற்று இருபத்திரண்டு பில்லியன் இருநூற்று முப்பத்து மூன்று மில்லியன் முந்நூற்று அறுபத்திரண்டாயிரம் ரூபாவாகவிருத்தல்"; என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதின்மூவாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு பில்லியன் இருநூற்று முப்பத்துமூன்று மில்லியன் முந்நூற்று அறுபத்திரண்டாயிரம் ரூபாவாகவிருத்தல்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையின் தலைப்பு இல. 249 இன் கீழ் காணப்படுகின்ற திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மூலதன செலவினம் என்னும் நிரலில் "2,019,970,000,000", என்னும் எண்களுக்குப் பதிலாக

"11,019,970,000,000" என்னும் எண்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*